## நினைவில் வைத்திருக்க வேண்டிய சில முக்கிய விடயங்கள்

- பூட்கையை கொள்வனவு செய்வதற்கு முன்னர், கம்பனியினால் அல்லது காப்புறுதி ஆலோசனையாளரினால் உங்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து தகவல்களையும் வாசித்து விளங்கிக்கொள்ளவும். நீங்கள் முக்கியமாக கையொப்பத்தை வைப்பதற்கு முன்னர், முன்மொழிவுப் படிவத்தையும் ஏதேனும் அது சார்ந்த பிரகடனங்களையும் கவனமாக வாசித்தல் வேண்டும்.
- முதலீட்டு இணைப்பு நிதியங்களின் கடந்த கால செயலாற்றுகைகள் அவர்களின் எதிர்கால செயலாற்றுகை தொடர்பாக உத்தரவாதத்தை வழங்கமாட்டாது. அதனால் முதலீட்டை தேர்ந்தெடுப்பதற்கு வழிகாட்டலாக மட்டுமே அதனைப் பயன்படுத்த முடியும்.
- முதலீட்டு இணைப்பு காப்புறுதிப் பூட்கைகளில் உங்கள் பணத்தை முதலீடு செய்யப் போகின்றீர்கள் எனில், அதில் உள்ள இடர்களைக் கவனத்தில் கொள்வதுடன் அது சார்ந்த இடர்கள் தொடாபாக நீங்கள் விளங்கிக்கொண்டுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- உங்கள் காப்புறுதி கம்பனியிடமிருந்து அல்லது காப்புறுதி ஆலோசகரிடமிருந்து முதலீட்டு இணைப்பு காப்புறுதிப் பூட்கையில் காணப்படும் இடர்கள் மற்றும் முதலீட்டு வருமானம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- காப்புறுதிப் பூட்கையை தொடர்ந்து பேணுவது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு காப்புறுதிப் பத்திரம் கிடைக்கப் பெற்ற தினத்தில் இருந்து 21 நாட்கள் உங்களுக்கு கிடைக்கப்பெறும். இந்த காலவெல்லையினுள் காப்புறுதி பூட்கையினை இரத்துசெய்வதற்கு நீங்கள் தீர்மானித்தால், நீங்கள் செலுத்திய தொகை மீள உங்களுக்கு வழங்கப்படும். (காப்புதிக் கம்பனி ஆரம்பத்தில் மேற்கொண்ட செலவுகளை அறவிட்டபின்)


மேலதிகத் தகவல்களுக்குத் தொடர்புகொள்ளவும்

சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள் அலகு

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

11வது மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்த மையம்
கொழும்பு 01.
தொலைபேசி இலக்கம்: 011 2396184-9
பக்ஸ்: 011 2396190


INSURANCE
REGULATORY
COMMISSION OF
SRI LANKA

---

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி பூட்கையாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதிப் பூட்கையாளர்களின் நன்மையினை பாதுகாக்கும் நோக்கத்துடன் இலங்கை காப்புறுதிக் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்தல், மேற்பார்வை செய்தல், மற்றும் ஒழுங்குபடுத்தவதற்காக நிறுவப்பட்டுள்ள நியதிச் சட்ட நிறுவனமாகும்.

# முதலீட்டு இணைப்பு (Investment-linked) காப்புறுதிப் பூட்கைகள்



INSURANCE
REGULATORY
COMMISSION OF
SRI LANKA

**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**

**இது முதலீட்டு இணைப்பு காப்புறுதிப் பூட்கைகள் தொடர்பான அறிமுக வழிகாட்டலாகும். இது நீங்கள் முதலீட்டு இணைப்பு காப்புறுதிப் பூட்கையைக் கொள்வனவு செய்யும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய அடிப்படைத் தகவல்களை வழங்குகின்றது.**

## முதலீட்டு இணைப்பு காப்புறுதி பூட்கை என்பது என்ன?

- இது முதலீட்டு நன்மைகள் மற்றும் பாதுகாப்பு எனும் இரண்டையும் வழங்கும் ஆயுள் காப்புறுதித் திட்டமாகும்.
- செலுத்தப்படும் தவணைக் கட்டணத்தின் ஒரு பகுதி உங்களுக்கு ஆயுள் காப்புறுதிப் பூட்கைக்கான பாதுகாப்பை வழங்குகையில் மற்றைய பகுதி உங்கள் விருப்பத்தின் அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளில் முதலீடு செய்யப்படும்.
- காப்புறுதிப் பூட்கை குறைந்தபட்சம் மரணத்தின் போதான நன்மைகளை உள்ளடக்குவதுடன் உங்கள் விருப்பம் மற்றும் கிடைக்கப்பெறுதல் என்பவற்றுக்கு அமைவாக ஏனைய காப்புறுதிக்கான தேர்வினைக் கொண்டிருக்கும்.

## எவ்வாறு உங்கள் பணம் முதலீடு செய்யப்படும்?

- நீங்கள் சௌகரியமாகக் கருதும் இடர் மட்டத்தின் அடிப்படையில் முதலீடு செய்வதற்கு, பல்வேறுபட்ட நிதியங்களைத் தேர்ந்தெடுக்க முடியும்.
- முதலீட்டு நிதி சமமான பெறுமதியுடைய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன், அந்த குறிப்பிட்ட நிதியத்தில் முதலீடுகள் செயற்படுவதன் அடிப்படையில் அந்த அலகுகளின் விலைகள் மாறுபடும்.
- காப்புறுதிக் கம்பனியினால் இந்த முதலீட்டு நிதியங்கள் முகாமைத்துவப்படுத்தப்படுவதுடன், உங்கள் முதலீட்டுக்கான அலகுகளின் விலை மற்றும் பெறுமதியை நீங்கள் கண்காணிக்க முடியும். அத்துடன், காப்புறுதிக் கம்பனி உங்கள் முதலீடு தொடர்பாக, உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பரிமாற்றங்களையும் அறவிடப்பட்ட கட்டணங்களையும் வெளிப்படுத்தும் வருடாந்தக் கூற்றினை உங்களுக்கு அனுப்பி வைக்கும்.
- உங்களுக்கு வளர்ச்சியடையும் அல்லது உரிமைப் பங்குகள் சார்ந்த நிதியங்கள் உயர் விளைவினை வழங்கக்கூடும். எனினும், உயர் விளைவுகள் அதிகமான இடர்களைக் கொண்டிருக்கும் என்பதை நீங்கள் மனதில் கொள்ளுதல் வேண்டும்.

## எவ்வகையான இடர்கள் ஏற்படும்?

- ஏனைய எந்தவொரு முதலீட்டையும் போலவே, இந்த காப்புறுதி இணைப்புத் திட்டத்தில் முதலீடு செய்யும் பொழுதும் முதலீட்டு இடர்களை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- முதலீடானது முதலீட்டு நிதியத்தின் அலகு விலையுடன் இணைக்கபட்டதிலிருந்து, உங்கள் முதலீட்டின் மொத்தப் பெறுமதி அலகு விலையின் மாற்றத்துடன் மாறிக்கொண்டிருக்கும்.
- அலகு விலை வீழ்ச்சியடைந்தால், உங்கள் முதலீட்டின் பெறுமதியும் குறைவடைவதுடன், மறுதலை விளைவும் ஏற்படும். பூட்கை முதிர்ச்சியின் போது அல்லது அலகுகள் விற்பனை செய்யும் பொழுது நீங்கள் இலாபத்தை அல்லது நட்டத்தை உணர்ந்துகொள்ள முடியும்.
- முக்கியமாக, நீங்கள் முதலீடு செய்ததை விடக் குறைந்த தொகையைப் பெற்றுக்கொள்வதர்க்கான இடர் உள்ளது.
- பூட்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு காப்புறுதி நன்மைகளுக்கு மட்டுமே காப்புறுதிக் கம்பனி பொறுப்பாக இருப்பதுடன், முதலீட்டு விளைவுகள் தொடர்பான இடர் காப்புறுதிப் பூட்கையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## முதலீட்டு இணைப்பு காப்புறுதிப் பூட்கைகளைக் கொள்வனவு செய்யும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் எவை?

- முதலீட்டு இணைப்பு காப்புறுதிப் பூட்கைகளைக் கொள்வனவு செய்வதற்கு நீங்கள் தீர்மானித்தால், முதலீட்டுத் தொகை, நீங்கள் முதலீடு செய்ய விரும்பும் நிதியத்தின் வகை, அவசியமான பாதுகாப்பு / ஆயுள் காப்பீட்டின் அளவு மற்றும் தவணைக் கட்டணத்தை செலுத்த வேண்டிய கால அளவு போன்ற காரணிகள் தொடர்பாக கவனம் கொள்ளுதல் வேண்டும்.
- ஒதுக்கீட்டுக் கட்டணம், நிதி முகாமைத்துவக் கட்டணம், பூட்கை நிர்வாகக் கட்டணம், இறப்புக் கட்டணம், நிதியத்திற்கு இடையில் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கான கட்டணம் மற்றும் ஒப்புவிப்புக் கட்டணம் போன்ற கட்டணங்கள் அறவிடப்படுவதனால் உங்கள் முதலீட்டுப் பெறுமதி குறைவடைவதற்கு வாய்ப்புகள் உள்ளதொன்பதை நீங்கள் அறிந்திருத்தல் வேண்டும். காப்புறுதிக் கம்பனி அல்லது உங்கள் காப்புறுதி ஆலோசனையாளரிடமிருந்து இக்கட்டணங்களின் பெறுமதி, அடிப்படை மற்றும் காலஅளவு என்பன தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- சில பூட்கைகள் முதல் மூன்று வருட காலத்திற்கு எந்தவொரு காசுப் பெறுமதியையும் சேர்ப்பதில்லை. அதாவது பூட்கையானது இக்காலத்தினுள் இடைநிறுத்தப்பட்டால், எந்தவொரு முதலீட்டுத் தொகையையும் நீங்கள் பெற்றுக்கொள்ளமாட்டீர்கள்.
- ஆரம்பத்திலேயே உங்களுக்கு முதலீட்டை தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. நிதியினை நிலையான வருமானம் உள்ள அரசாங்க பிணையங்கள் மற்றும் முறிகளில் முதலீடு செய்வதை விடவும் பிரதானமாக உரிமைப் பங்குகளில் முதலீடு செய்வதில் அதிக இடர்கள் உள்ளது. உங்கள் விருப்பத்தின் அடிப்படையில், உங்கள் பணம் முழுவதையும் ஒரு நிதியத்தில் முதலீடு செய்வதற்கான அல்லது பல்வேறுபட்ட நிதியங்களில் முதலீடு செய்வதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள முடியும்.
- எப்போது நீங்கள் உங்கள் முதலீட்டு முறையை மாற்ற விரும்புகின்றீர்களோ அப்போது உங்கள் முதலீட்டு அலகுகளை ஒரு நிதியத்தில் இருந்து இன்னொரு நிதியத்திற்கு மாற்ற முடியும். அனேக கம்பனிகள் ஒரு வருடத்திற்கு கட்டணமின்றிய ஒரு மாற்றத்தை அனுமதிக்கின்றன.
- உங்களால் கொடுப்பனவு செய்யக்கூடிய தொகையை கவனத்தில் கொண்டு தவணைக் கட்டணத்தை தீர்மானிக்கவும். முதிர்ச்சி அடைவதற்கு முன்னர் முதலீட்டு இணைப்பு காப்புறுதிப் பூட்கையை இடைநிறுத்தினால், அந்தப் பூட்கையில் இருந்து உச்சளவான நன்மையை உங்களால் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும்.